மாணவ, மாணவியருக்கான உபகாரச் சம்பளத்தொகை.

*வினா எண். 20 திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1979-80ஆம் ஆண்டில் மாணவ, மாணவியருக்கான உபகாரச் சம்பளம் வழங்குவதற்கென எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது?

(ஆ) ஒதுக்கப்பட்ட பூரா தொகையும் செலவு செய்யப்பட்டதா?

(இ) இல்லையெனில் காரணம் யாது?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:

(அ) ரூ. 407.88 லட்சம்.

(ஆ) ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை முழுவதும் செலவு செய்யப்பட்டது.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. எல். இளையபெருமாள்: சபாநாயகர் அவர்களே கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 30-ந் தேதி வரையில் இந்த, உபகாரச் சம்பளம் மாணவர்களுக்கு கொடுக்கப்படவில்லை என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? அந்த காலதாமதத்திற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவரவர்களே, அரசுக்கு இதுப்பற்றி புகார் வந்துள்ளது. இந்த முறை அந்தத் தவறு நடக்காமலிருக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, அரிசன மாணவர்களுக்கு அரசு ஒதுக்கிய தொகையைப் பெறுவதற்காக சில உயர்ந்த ஜாதிக்காரர்களும் தாழ்த்தப்பட்ட மக்கள் என்று போலி சான்றிதழ் வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட புகார் அரசுக்கு வந்திருக்கிறதா? அப்படி புகார் ஏதும் வரவில்லை என்றால் என்னிடம் நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: புகார் வந்திருக்கிறதா என்று கேளுங்கள்; ஆதாரங்களைத் தனியாகக் கொடுக்கலாம்.

திரு. இரா. தாமரைக்கனி: அரசுக்கு புகார் வந்திருக்கிறதா? அந்தப் புகார்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: இதுபற்றி அரசுக்கு ஒன்றிரண்டு புகார்கள் வந்திருக்கின்றன. இதுகுறித்து அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: சபாநாயகர் அவர்களே, ஆரம்பப்பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் கொடுத்து வந்த உபகாரச் சம்பளம் நிறுத்தப்பட்டு, அதற்குப் பதிலாக புத்தகமாகக் கொடுப்பதாகச் சொல்லப்பட்டது. ஆனால் டிசம்பர் 31-ம் தேதி வரையில் மாணவர்களுக்கு அந்தப் புத்தகங்கள் வழங்கப்படவில்லை என்பது உண்மையா? அதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி உபகாரச் சம்பளத்தைப்பற்றியது. நீங்கள் புத்தகத்திற்குப் போய்விட்டீர்கள். தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்வார்.

திரு. எல். இளையபெருமாள்: உபகாரச் சம்பளத்திற்குப் பதிலாகத்தான் புத்தகம் கொடுக்க அரசு உத்தரவு போட்டிருக்கிறது; ஆகவே இதுவும் உபகாரச் சம்பளத்தைப் பற்றியதுதான். டிசம்பர் 31-ம் தேதி வரையில் அந்த புத்தகம் கொடுக்கப்படவில்லை, அதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவரவர்களே, என்னிடம் அதற்கான குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல வசதியாக இருக்கும்.

திரு பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, ஏற்கெனவே இந்த புத்தகங்களை பெற்றோர்கள் வாங்கிக்கொள்வார்கள்; அதற்கான பணத்தை அரசு வழங்கும். இப்போது உபகாரச் சம்பளத்தை புத்தகமாக வழங்குவதால், இந்த புத்தகம் தாமதமாக வழங்கப்படுவதால் கல்வி பாதிக்கப்படுகிறது. பெற்றோர்கள் வாங்குவதாக இருந்தால் பழைய புத்தகங்களைக் கூட வாங்கிக்கொள்வார்கள். ஆகவே, பழைய முறையே பின்பற்றப்படுமா? இதற்காக ஒதுக்கப்பட்ட பணம் முழுவதும் செலவழிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சொல்லியிருக்கிறார். ஒதுக்கப்பட்ட பணம் போதுமானதாக இருந்ததா அல்லது பற்றாக்குறையாக இருந்ததா என்பதை அறிவிப்பாரகளா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவரவர்களே, இதுகுறித்து தனிக் கேள்வி போட்டால் நான் பதில் சொல்ல எளிதாக இருக்கும். சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட பணம் முழுவதும் செலவிடப்பட்டுள்ளது என்ற விவரம் இருக்கிறது. புத்தகங்கள் மாணவர்களுக்கு தக்க நேரத்தில் வழங்கப்படவில்லை என்று அரசுக்கு புகார் வந்திருக்கிறது. அதுகுறித்து இந்த அரசு தக்க நடவடிக்கை எடுத்துவருகிறது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: தலைவரவர்களே, இந்த உபகாரச் சம்பளம் வாங்குகின்ற மாணவர்களுக்கு அவர்கள் எத்தனை முறை தேர்வில் தோற்றாலும் வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவரவர்களே, தனிக்கேள்வி போடவும்.

தெருவிளக்குகளுக்குக் குழாய் விளக்குகள் பொருத்துதல்

*கு. கா. வி. எண். 24—திரு. பாபுஜனார்த்தனன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா:—

தெரு விளக்குகளுக்கு குண்டு பல்புகள் போடுவதால் உயர் மின் அதிகரிப்பு காரணத்தால் (Voltage) அவை தீய்ந்து போய் விடுவதால் தெரு விளக்குகளை குழாய் விளக்குகளில் பொருத்துவது பற்றி நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இல்லை. உள்ளாட்சி நிறுவனங்களின் தீர்மானங்களுக்கிணங்கவே சாதாரண பல்புகளோ அல்லது குழல் விளக்குகளோ மின்வாரியத்தால் பொருத்தப்படுகிறது.

திரு. பாபு ஜனார்த்தனன்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லுகின்றபோது உள்ளாட்சித் தீர்மானங்களின் அடிப்படையில் விளக்கு போடுவதாகச் சொன்னார்கள். உள்ளாட்சி போய் ரொம்ப நாளாயிற்று. அந்த தீர்மான அடிப்படையில் பல்புகள் போட்டிருந்தால் அதுவும் போய் ரொம்ப நாளாயிற்று. நாங்கள் எல்லாம் அங்கே போகமுடியவில்லை. விளக்கு வைத்த பிறகு சட்டமன்ற உறுப்பினர்கள் போனால் கேலி செய்கிறார்கள். விளக்குகள் எரியாமல் இருட்டாக இருக்கும்போது, 'சட்டமன்ற உறுப்பினர் வந்திருக்கிறார், விளக்குகள் ஜெகஜோதியாக எரிகின்றன' என்று கிண்டலாகச் சொல்கிறார்கள். ஆகவே, எங்களைக் காப்பாற்றுகின்ற வகையில் குண்டு பல்புகளை மாற்றிவிட்டு குழாய் விளக்குகளைப் போடுவதற்கு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா?